# 05 கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தலில் மூல ஏடொன்றாகக் காசேடு



**இவ் அத்தியாயத்தின் ஊடாக பின்வரும் தலைப்புகள் பற்றி கலந்துரையாடப்படும்.**

5.1. பண ரீதியான கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல்.
5.2. ஒரு நிரல் காசேடும், இரு நிரல் காசேடும்.
5.3. வங்கி இணக்கக் கூற்று

## காசுப் புத்தகத்தில் கொடுக்கல் வாங்கல்களை முறையாகப் பேணுவோம்

வணிகப் பிரிவில் கல்வி கற்ற அமுதா புதிய பழங்களைக் கொள்வனவு செய்து மீள்விற்பனை செய்யும் வியாபார நடவடிக்கையில் ஈடுபட வணிகத் துறையினுள் நுழைந்தார். அவர் தனது பாடசாலை நண்பனான, தற்பொழுது கணக்காளராகத் தொழில் புரியும் ரவி என்பவரைச் சந்தித்தார். இருவருக்குமிடையில் நடந்த உரையாடலின் ஒரு பகுதி உமக்கு கீழே தரப்படுகின்றது.

அமுதா : வணக்கம்! அதிக காலத்துக்குப்பின் சந்திக்கிறோம். எப்படி உங்கள் சுகதுக்கங்கள்?

ரவி : மிகவும் நல்லது. நீங்கள் எப்படி?

அமுதா : இப்போது புதிய பழங்களுக்கு நல்ல கிராக்கிதானே! சிறியதொரு வியாபாரம் ஆரம்பிக்கலாம் என்று யோசிக்கிறேன். அதற்கு உங்கள் உதவி எனக்குத் தேவைப்படுகிறது.

ரவி : உண்மைதான்; வியாபாரம் ஒன்றை நடாத்திச் செல்லும் போது எல்லா கொடுக்கல் வாங்கல்களையும் குறித்து வைத்துக் கொள்வது ஒரு முக்கியமான விடயம், இது இலேசானது; அது முக்கியமானதும் கூட.

அமுதா : எல்லாவற்றையும் உடன்காசுக்குச் செய்வது கஷ்டமானது; கடனுக்கும் கொடுக்கல் வாங்கல் செய்ய வேண்டி ஏற்படும்.

ரவி : உடன் காசுக்குச் செய்தாலும், கடனுக்குச் செய்தாலும் அதற்குரிய பற்றுச்சீட்டு, கொடுப்பனவுக் கச்சாத்து, பட்டியல் போன்ற ஆவணங்கள் பாவிக்க வேண்டியிருக்கும். அவற்றில் கொடுக்கல் வாங்கல்களுக்கான தகவல்களை எழுதுகிறதால கணக்குவைக்கிறது லேசான காரியமாகும்.

அமுதா : அப்படியானால் காசோலை மூலம் கொடுக்கல் வாங்கல்கள் செய்யப்பட வேண்டி ஏற்பட்டால்....?

ரவி : இது மிக நல்ல கேள்வி, நாம் நடைமுறைக் கணக்கொன்றை ஆரம்பித்தால் வங்கி நமக்கு காசோலைப் புத்தகம் ஒன்று தரும். கொடுப்பனவு செய்யும் போது காசோலையை வழங்க முடியும். கிடைக்கும் காசோலைகளை வங்கியில் உங்கள் கணக்கில் வைப்புச் செய்யமுடியும். வங்கிக்கு நம்பிக்கையாக இயங்கினால் இன்னும் நிறைய பலன் பெறலாம்.

அமுதா : காசுமூலமும், காசோலை மூலமும் செய்கிற கொடுக்கல் வாங்கல்களை காசுப்புத்தகத்தில் பதிவு செய்ய எனக்கு முடியும். அதற்குத் தனியான காலமும் நேரமும் தேவையாகும்.

ரவி : அப்படி நினைக்கவேண்டாம். காசால் செய்கிற கொடுக்கல் வாங்கல்கள் போன்றே வங்கி மூலமாக செய்கின்ற கொடுக்கல் வாங்கல்களையும் சரியாக காசுப்புத்தகத்தில் பதியுங்கள். வங்கியிலிருந்து வங்கிக் கூற்று ஒன்று அனுப்புவார்கள்தானே!

அமுதா : அதைப்பற்றி எனக்கு அவ்வளவாகத் தெரியாது. எனக்கு அதைப்பற்றி விபரமாகச் சொன்னால் நன்றாய் இருக்கும்.

ரவி : நல்லது, நான் விளக்கம் ஒன்று தருகிறேன். நீங்கள் உங்கள் காசுப் புத்தகத்தில் காசு மூலமாகவும், காசோலை மூலமாகவும் செய்கிற கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்கிறமாதிரி, வங்கியும் உங்கள் நடைமுறைக் கணக்கில் நீங்கள் வங்கியோடு செய்கிற கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்யும்.
பிறகு, 'வங்கிக் கூற்று' எனும் அறிக்கையை உங்களுக்கு அனுப்பும் வங்கிக் கூற்றிலுள்ள விபரங்களை உங்கள் காசுப்புத்தகத்தில் வங்கியோடு செய்த கொடுக்கல் வாங்கலோடு ஒப்பிட்டு சரி பிழையை நாங்களே பார்த்துக் கொள்ளலாம். வங்கிக் கணக்கிணக்கக் கூற்று ஒன்றைத் தயாரித்து மீதிகளுக்கிடையிலான சரியான தன்மையை நிச்சயப் படுத்திக் கொள்ளலாம்.

அமுதா : உங்கள் ஆலோசனை மிகவும் பிரயோசனமானது. உங்கள் ஆலோசனைக்கு நன்றி!

மேற்கூறிய கலந்துரையாடலை வாசித்த உங்களுக்கு வணிகக் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தலின் அவசியம் பற்றி பல்வேறு எண்ணங்கள் தோன்றியிருக்கும். இது தொடர்பில் மேலும் விளக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்காக, கொடுக்கல் வாங்கல்கள் காசேட்டில் பதியப்படும் முறைபற்றி மேலும் ஆராய்ந்து பார்த்தல் முக்கியமானது.

## அறிமுகம்

வணிகக் கொடுக்கல் வாங்கல் நடைபெறும் பொழுது பல்வேறு மூல ஆவணங்கள் தோன்றுகின்றன. இவ்வாறு தோன்றும் மூல ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு, முதன் முதலில் கொடுக்கல் வாங்கல்களைப் பதியும் ஏடுகள் மூலப் பதிவேடுகள் எனக் கொள்ளப்படும். நாளேடுகள், குறிப்பேடுகள் போன்றன மூலப்பதிவேடுகளாக அமைவதோடு, காசேடும் ஒரு மூலப் பதிவேடாகும். இது விசேடமாக முக்கியம் பெறுகின்றது.

காசுக் கொடுக்கல் வாங்கல் இடம் பெறும் பொழுது தோன்றும் மூல ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு முதன்முதலில் காசுப் புத்தகத்தில் பதிவுகள் இடம் பெறும். இங்கு கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்யும் போது அதற்கு பொருத்தமான முறையில் காசுப் புத்தகத்தைத் தயாரித்துக்கொள்ள வேண்டும்.

வணிகத்தினால் நடைமுறைக் கணக்கினுடாகச் செய்யப்படும் கொடுக்கல் வாங்கல்களை உள்ளடக்கிய அறிக்கை ஒன்று வங்கியின் மூலம் வணிகத்திற்குக் கிடைக்கப்பெறும். அது **வங்கிக் கூற்று** அல்லது **வங்கி கணக்கு விபரம்** எனப்படும். காசுப்புத்தகத்தின் வங்கி நிரலுடன் வங்கிக் கூற்றின் நிரல்கள் ஒப்பிடப்பட்டு வங்கி மீதிகளின் வேறுபாடுகள் உருவாகுவதற்கு ஏதுவான காரணிகள் வெளிப்படுத்தப்படும். அதற்கு அமைய "வங்கிக்கணக்கிணக்கக் கூற்று" தயார் செய்யப்படும்.

மேலே தரப்பட்ட அம்சங்களை நிறைவேற்றிக் கொள்வதில் கீழே தரப்படும் அடிப்படைப் பதங்களில் உங்கள் கவனத்தைச் செலுத்தவும்.

- மூல ஆவணங்கள்
- மூல ஏடுகள்
- காசுப் புத்தகம்
- பேரேட்டுப்பதிவுகள்
- காசு, வங்கிமீதிகள்
- மறுக்கப்பட்ட காசோலைகள்
- தரகு
- நேரடிவைப்புக்கள்
- நிலையியற் கட்டளை
- வங்கிக்கட்டணம்
- வசூலிக்கப்படாத காசோலைகள்
- சமர்ப்பிக்கப்படாத காசோலைகள்
- தவறுகள்/ வழுக்கள்
- வங்கிக் கூற்று
- சீராக்கப்பட்ட காசு மீதி
- வங்கிக்கணக்கிணக்கக்கூற்று

## காசுக் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல்

உற்பத்தி, வியாபாரம், சேவை என்னும் தன்மைகளின் அடிப்படையில் வணிகங்களை வகைப்படுத்தலாம். எவ்வாறான தன்மை கொண்டிருப்பினும் அவற்றில் கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெறும். வணிகம் தொடர்பில் வெளிக்கட்சியினருக்கு இடையிலான வளப்பரிமாற்றம், பொருளாதார நிகழ்வுகள் கொடுக்கல் வாங்கல் எனப்படும்.

வணிகத்தில் இடம் பெறும் கொடுக்கல் வாங்கல்களை இரு அடிப்படையில் வகைப்படுத்தலாம்.

| வணிகக் கொடுக்கல் வாங்கல்கள் | |
|---|---|
| காசுக் கொடுக்கல் வாங்கல்கள் | கடன் கொடுக்கல் வாங்கல்கள் |

கொடுக்கல் வாங்கல் இடம் பெறும் சந்தர்ப்பத்தில், காசுப் பெறுகை அல்லது கொடுப்பனவு நிகழும் நடவடிக்கை காசுக்கொடுக்கல் வாங்கல் எனப்படும்.

**உதாரணம்**


ஒரு கிலோகிராம் ரூபா 50 வீதம் 20 கிலோகிராம் வாழைப்பழம் காசுக்கு விற்பனை

கொடுக்கல் வாங்கல் இடம் பெறும் சந்தர்ப்பத்திலல்லாது அதன் பின்னர் அதற்குரிய காசுப்பெறுகை அல்லது காசுக்கொடுப்பனவு நிகழுமாயின் அக் கொடுக்கல் வாங்கல் கடன் கொடுக்கல் வாங்கல் எனப்படும்


**உதாரணம்**

குமாருக்கு ரூபா 5,000 பொருள் கடனுக்கு விற்பனை

பின்வரும் உருவப்படங்கள் 1, 2ஐ அவதானிக்க.




உருவப்படம் - 5.1




உருவப்படம் - 5.2

உருவப்படம், 5.1 க்கு அமைய ரூபா 1000 ற்கு காசுக்கு விற்பனை செய்யப்பட்டது. கொடுக்கல் வாங்கலின் போது காசு பரிமாற்றம் இடம் பெற்றது. இது ஒரு காசு கொடுக்கல் வாங்கலாகும்.

உருவப்படம் 5.2 க்கு அமைய ரூபா 5000 பெறுமதியான பொருட்கள் குமாருக்கு கடனுக்கு விற்கப்பட்டுள்ளது. இங்கு வியாபாரத்தில் ரூபா 5000 கடன் கொடுக்கல் வாங்கல் இடம்பெற்றுள்ளது. இங்கு கொடுக்கல் வாங்கல் தொடர்பாக **வாடிக்கையாளரின் பெயர்** குறிப்பிடப்படுவது அவசியமாகும். இவை தொடர்பில் எப்பொழுது காசு பரிமாற்றப்படுகின்றதோ, அச்சந்தர்ப்பத்திலேயே காசுக்கான பதிவு காசுப் புத்தகத்தில் இடம் பெறும்.

## காசேட்டும் அதன் தொழிற்பாடுகளும்

காசுப் பெறுவனவு, காசுக் கொடுப்பனவு பற்றிய உண்மைத் தகவல்கள், அவை இடம் பெற்ற நாளொழுங்குக்கு அமைய பதிவு செய்யும் ஏடு **காசேடு எனப்படும்.** கணக்கீட்டின் அடிப்படையில் பார்க்கும் பொழுது காசேட்டினால் நிறைவேற்றப்படும் அடிப்படைக் கருமங்கள் இரண்டாகும். அவையாவன.

- மூலப் பதிவேடாகக் காசேடு செயற்படல்
- பேரேட்டுக் கணக்காகவும் காசேடு செயற்படல்

வணிகக் கொடுக்கல் வாங்கல்களைப் பேரேட்டுக் கணக்குகளில் பதிவு செய்வதற்கு முன் ஆரம்பத்தில் பதிவு செய்யும் ஏடு மூலப்பதிவேடாகும். கொடுக்கல் வாங்கல்களுக்கு உரிய மூல ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு மூலப் பதிவேடுகள் தயாரிக்கப்படும்.

**மூல ஆவணங்கள்** என்பது, கொடுக்கல்வாங்கலுக்குரிய தரப்பினர், பணப் பெறுமதி, நிபந்தனைகள், வேறு தேவையான தகவல்களைக் கொண்டமைந்த ஒரு சட்டபூர்வ ஆவணமாகும். காசுப் பெறுகை, காசுக்கொடுப்பனவு தொடர்பான மூல ஆவணங்களாக பற்றுச்சீட்டும், கொடுப்பனவுக் கச்சாத்தும் அமையும். காசுப்பெறுவனவின் போது பற்றுச்சீட்டும், காசுக்கொடுப்பனவின் போது கொடுப்பனவுக் கச்சாத்தும் மூல ஆவணங்களாக அமையும். மூல ஆவணங்களில் காணப்படும் திகதி, விபரம், இலக்கம், உரிய பெறுமதி ஆகியவை காசேட்டின் அவ்வவ் நிரல்களில் பதியப்படும்.

இதற்கமைய காசுக் கொடுக்கல்வாங்கலுக்குரிய மூல ஆவணங்களிலிருந்து பெறப்படும் தகவல்கள் முதன்முதலாக காசேட்டில் பதியப்படுவதால், காசேடு ஒரு மூலப்பதிவேடாகக் கொள்ளப்படும். காசுக் கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடைய பெறுவனவு கொடுப்பனவு அனைத்தும் காசேட்டில் பொழிப்பாக காட்டப்படும். மேலும் காசேடானது எவ்வாறான முறையில் பேரேட்டுக் கணக்காக செயற்படுகிறது என்பதனை அடுத்துப் பார்ப்போம்.

பேரேட்டுக்கணக்கு என்பது கொடுக்கல்வாங்கல்களின் இரட்டை விளைவுகளை இரட்டைப்பதிவு முறைமைக்கமைய பதிவுசெய்யும் ஒரு மாதிரி அமைப்பாகும். காசு என்பது சொத்துக் கணக்கு வகையைச் சார்ந்ததாகும். ஆதலால் சொத்துப் பற்றிய தத்துவத்துக்கு அமைய காசு பெறுவனவு, காசு கொடுப்பனவு காசேட்டில் பதிவு செய்யப்படும். சொத்துக் கணக்கு பற்றிய தத்துவத்தின்படி சொத்து அதிகரிப்பு வரவு எனவும், சொத்துக் குறைவு செலவு எனவும் பதியப்படும்,

- காசு அதிகரிப்பு காசேட்டில் (காசுக் கணக்கில்) வரவிலும்,
- காசுக் குறைவு காசேட்டில் (காசுக் கணக்கில்) செலவிலும் பதியப்படும்.

இதற்கமைய காசுப் பெறுகை, காசேட்டில் வரவுப்பதிவுக்கு உட்படுவதால் அதற்குரிய செலவுப் பதிவு உரிய பேரேட்டுக் கணக்கில் செலவுப் பக்கத்தில் பதிவு செய்யப்படும். காசுக் கொடுப்பனவுகள் காசேட்டில் செலவில் பதியப்படுவதால், இதற்குரிய வரவுப் பதிவு உரிய பேரேட்டுக் கணக்கில் வரவில் பதிவு செய்யப்படும். இவ்வாறு இரட்டைப் பதிவுத் தத்துவத்துக்கு அமைய காசேட்டில் பதிவுகள் இடம்பெறுவதால் காசேடு பேரேட்டுக் கணக்காகவும் தொழிற்படுகின்றது.

## காசேட்டைப் பேணுவதால் ஏற்படும் அனுகூலங்கள்

- குறிப்பிட்ட காலத்துக்குள் எவ்வளவு காசு கிடைக்கப் பெற்றதென அறிந்து கொள்ளல்
- குறிப்பிட்ட காலத்துக்குள் எவ்வளவு செலவுசெய்யப்பட்டதென அறிந்து கொள்ளல்
- குறிப்பிட்ட கால முடிவில் எவ்வளவு காசு மீதியாக உள்ளதென அறிந்து கொள்ளல்.
- எம்முறையில் காசு கொடுக்கல் வாங்கல் இடம் பெற்றது என அறியக்கூடியதாகவும், காசு கொடுக்கல் வாங்கலுக்குரிய தகவல்களை வெவ்வேறாகவும் முன்வைக்கக் கூடியதாகவும் இருத்தல்
- வரையறுக்கப்பட்ட வளமாகிய பணத்தினை, கட்டுப்பாட்டுடன் ஈடுபடுத்துவதற்குத் தேவையான வழிமுறைகளை வழங்கல்.
- காசு நடவடிக்கை தொடர்பான தீர்மானம் எடுப்பதற்கு உதவுதல்.

**வணிகத்திற்குப் பணம் பெறப்படும் வழிகள்.**

**உதாரணம்**

- வணிகம் ஆரம்பிக்கும் பொழுது உரிமையாளரால் இடப்படும் பணம்
- உரிமையாளரால் இடப்படும் மேலதிக பணம்
- பொருட்கள், சேவைகளின் விற்பனை வருமானம், கட்டட வாடகைப் பெறுகை, முதலீட்டு வருமானம் ஆகியன.
- வங்கிக் கடன், அடகுக்கடன் என்பவற்றால் கிடைக்கும் பணம்.
- மோட்டார் வாகனம், தளபாடம், இயந்திரம் ஆகிய சொத்து விற்பனையால் பெறப்படும் பணம்.
- கடன்பட்டோரிடம் இருந்து பெறப்படும் பணம்.
- நன்கொடை மூலம் பெறப்படும் பணம்.

**வணிகத்திற்குக் கிடைக்கும் காசு மீண்டும் பின்வரும் வழிகள் மூலம் வெளிச்செல்லும்.**

**உதாரணம்**

- உரிமையாளர் தனது சொந்தத் தேவைக்காக நிறுவனத்திலிருந்து எடுக்கும் காசு
- போக்குவரத்துச் செலவு, ஊழியர் சம்பளம், காப்புறுதிக்கட்டணம் போன்ற செலவுகள்.
- பெற்ற வங்கிக் கடன், அடகுக்கடன் என்பவற்றை மீளச் செலுத்துதலும் அவற்றுக்கான வட்டி செலுத்துதலும்.
- மோட்டார் வாகனம், இயந்திரம், தளபாடம் போன்ற சொத்துக்களைக் கொள்வனவு செய்யும் செலவு
- கடன் கொடுத்தோருக்கு காசு செலுத்தல்.

**செயற்பாடு 04**

(அ) வணிகத்தில் இடம் பெறும் காசுக்கொடுக்கல் வாங்கல்களுக்கும், கடன் கொடுக்கல் வாங்கல்களுக்கும் வெவ்வேறு ஐந்து உதாரணங்கள் தருக.

(ஆ) 2008.01.01 இல் ரூபா 25,000 காசு மீதியாக இருப்பதாகக் கொள்க. மேற்கூறிய (அ) வில் குறிப்பிட்ட காசுக் கொடுக்கல் வாங்கல்களின் இறுதியில் காசுமீதி எவ்வளவாக இருக்கும் எனக் காட்டுக.

(இ) மேலே (அ) வில் குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கலினால் ஆரம்ப காசுமீதி அதிகரிப்பதற்கு அல்லது குறைவதற்குக் காரணமான கொடுக்கல் வாங்கல்களை அட்டவணைப்படுத்துக.

(ஈ) வணிகர்களுக்கு எக்காரணத்தினால் காசுக் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் முக்கியம் பெறுகின்றது என்பதை விளக்குக.

(உ)i. காசுப்பெறுவனவு, காசுக்கொடுப்பனவு என்பவற்றைப் பதிவதற்கு பயன்படுத்தப்படும் மூல ஏடு யாது?

ii. எவ் அடிப்படையில் காசுப் பெறுவனவும், காசுக் கொடுப்பனவும் காசேட்டில் பதிவு செய்யப்படும்.

## 5.2 ஒரு நிரல் காசேடும் இருநிரல் காசேடும்

வணிகத்தில் இடம்பெறும் காசுப் பெறுவனவு கொடுப்பனவுகளின் தன்மைக்கேற்ப காசுப்புத்தகத்தைத் தயாரித்துக் கொள்ளலாம். காசுப் பெறுவனவு, காசுக் கொடுப்பனவு என்பனவற்றின் தன்மை என்பது காசுக் கொடுக்கல் வாங்கல் இடம்பெறுவது தாள், குற்றி நாணயங்களிலா? அல்லது காசோலை மூலமாகவா? என்பதாகும். இதன்படி தேவைக்கமைய காசேட்டில் பெறுமதியைக் காட்டும் நிரலானது வெவ்வேறாக தயாரிக்கப்படுகிறது.

வணிகத்தில் தாள், குற்றி நாணயங்களின் மூலம் இடபெறும் கொடுக்கல் வாங்கல்களுக்கு மேலதிகமாக காசோலையும் பயன்படுத்தப்படுகிறது. காசோலை மூலம் கொடுக்கல் வாங்கல்கள் செய்வதற்காக வணிக வங்கிகளில் நடைமுறைக் கணக்கொன்றை (கேள்வி வைப்பு) ஆரம்பிக்கலாம். காசோலைக் கொடுக்கல் வாங்கல்கள் இன்று நடைமுறையில் பரவலாக காணப்படுகின்றன. இதன்படி வணிகமொன்றில் காசுக் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறும் இரு முறைகள் பின்வருமாறு

1) தாள், குற்றி நாணயங்கள் ஊடாக
2) காசோலையினூடாக (நடைமுறைக்கணக்கினூடாக)

## ஒற்றைநிரல் காசேடு

வணிகமொன்றில் காசு மூலம் மட்டும் நடைபெறும் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதற்கு பயன்படுத்தப்படும் ஏடு **ஒற்றை நிரல் காசேடு** எனப்படும். ஒற்றை நிரல் காசேட்டின் மாதிரியமைப்பு கீழ் வருமாறு.

**வரவு** **ஒற்றை நிரல் காசேடு** **செலவு**

| திகதி | ப.இ | விபரம் | பேப | பெறுமதி | | தி-கதி | க.இ | விபரம் | பேப | பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ரூ. | ச | | | | | ரூ. | ச |
| | | | | | | | | | | | |

காசு பெறுவனவு, கொடுப்பனவு தொடர்பில் சான்றாகப் பயன்படுத்தப்படும் எழுத்து மூலமான சான்று, காசுப்புத்தகத்தின் மூலஆவணங்கள் எனப்படும். அவையாவன:

- காசு பெறுவனவின் போது - பற்றுச்சீட்டு
- காசு கொடுப்பனவின் போது - கொடுப்பனவுக் கைச்சாத்து

## பற்றுச்சீட்டு (Receipt)

வணிக நிறுவனம் ஒன்றினால் காசு பெறப்பட்டது என்பதற்கு அத்தாட்சிப்படுத்தி பொறுப்புவாய்ந்த அதிகாரியினால் அல்லது நபரால் கையொப்பமிடப்பட்டு வழங்கப்படும் ஆவணம் பற்றுச் சீட்டு ஆகும். இது காசுப் பெறுகை ரசீது, காசுப் பெறுகை, காசு மெமோ (Cash memo) எனவும் அழைக்கப்படும்.

இது மூலப்பிரதி, பிரதி என இரண்டு பிரதிகள் அல்லது அதற்குக் கூடுதலான பிரதிகள் தயாரிக்கப்படும். மூலப் பிரதிகளில் எழுதப்படுபவை ஏனைய பிரதிகளிலும் பதியப்படும். மூலப்பிரதியை வாடிக்கையாளருக்கு வழங்கியபின் பற்றுச்சீட்டுப்புத்தகத்தில் பிரதிகள் மீதியாகக் காணப்படும். பிரதிகளில் காணப்படும் தகவல்களுக்கு இணங்க காசுப் புத்தகத்தில் பதிவுகள் இடம் பெறும்.

பற்றுச்சீட்டொன்றின் மாதிரி வடிவம் ஒன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

**பற்றுச்சீட்டு**

இலக்கம் 2261

சந்திரா ஸ்டோர்ஸ்
50, லோவர் வீதி,
பதுளை.
தொ.பே.இல 055-2230026

திகதி ............................

................................................ என்பவருக்கு வழங்கிய ..........................................

இலக்கமுடைய பட்டியலுக்கு அமைய கிடைக்கப்பெற வேண்டிய ரூபா .........................

காசு/ காசோலையாக பெற்றுக் கொண்டேன்.

ரூபா .........................

முத்திரை

கையொப்பம

## கொடுப்பனவுக் கைச்சாத்து(Voucher)

வியாபார நிறுவனங்களில் காசுக் கொடுப்பனவின் போது பயன்படுத்தப்படும் ஒரு மூல ஆவணம் கைச்சாத்து ஆகும். சட்டரீதியாக பணத்தில் அல்லது காசோலை மூலம் கொடுப்பனவு இடம் பெறும் போது அதற்கான மூலத் தகவல்கள் கைச்சாத்தில் இடம்பெறும். காசுக் கொள்வனவு, கடன் கொடுநருக்கான கொடுப்பனவு, சம்பளக் கொடுப்பனவு போன்ற சந்தர்ப்பங்களின் போது கொடுப்பனவுக் கைச்சாத்து பயன்படுத்தப்படும். அவற்றில் காணப்படும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு காசேட்டில் பதிவுகள் இடம்பெறும்.

கொடுக்கல் வாங்கல் இடம் பெற்றது என்பதற்கும், அதற்கான கொடுப்பனவு இடம் பெற்றது என்பதற்கும் எழுத்து மூலமான ஆதாரம் என்னும் வகையில் இது முக்கியத்துவம் பெறுகிறது. கீழே தரப்படும் கைச்சாத்துமாதிரி படிவத்தை நோக்குவோம்.

சந்திரா ஸ்டோர்ஸ்
இல. 50 லோவர் வீதி
பதுளை

ரூபா.......................... திகதி..................

ரூபா ......................................................................

......................................................................................

அவர்கட்கு செலுத்தப்பட்டது.

கச். இல ....................

காசோலை இலக்கம் ............

காசு ரூபா ....................

கொடுத்த திகதி ....................

அனுமதித்தவர் ....................

கணக்கு ....................

விபரம் ..................................................................................................................

..................................................................................................................

பட்டியல் இலக்கம் ........... கொள்வனவு சிட்டை .......... பற்றுச்சீட்டு இலக்கம் ............

## காசேட்டில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல்

வணிகத்தில் காசுக் கொடுக்கல் வாங்கல்கள் காசேட்டில் பதியப்படும் முறை பற்றியும், காசேட்டின் மீதியைக் கண்டறியும் முறை பற்றியும் கலந்துரையாடுவோம்.

01) 2008.01.01 இல் சந்திரா ரூபா 30,000 முதலிட்டு, பழங்களை வாங்கி விற்கும் வியாபாரம் ஒன்றை ஆரம்பித்தார்.
- வியாபாரத்துக்கு ரூபா 30,000 காசு கிடைத்துள்ளது. அது வியாபாரத்தின் காசுச் சொத்தாகும்.
- ரூபா 30,000 சொத்து தொடர்பாக சந்திராவுக்கு உள்ள உரிமை ரூபா 30,000 ஆகும். இது மூலதனம் ஆகும்.
- காசு சொத்துக் கணக்கு வகையை சார்ந்ததால் சொத்து அதிகரிப்பு வரவு எனப் பதியப்படும். ஆதலால் ரூபா 30,000 காசேட்டில் வரவில் பதியப்படும்.

02) 2008.01.02 இல் வங்கிக் கடனாக ரூபா 25,000 பெறப்பட்டது. (பற்றுச்சீட்டு இலக்கம் 001)
- கடன் பெற்றதனால் வியாபாரத்தின் காசு சொத்து ரூபா 25,000 வால் அதிகரிக்கும்
- அக்கடன் பணம், வங்கிக்கு மீண்டும் செலுத்தவேண்டியுள்ளதால் வங்கிக்கடன் என்னும் ரூபா 25,000 பொறுப்பொன்று உருவாகும்.
- சொத்து அதிகரிப்பு "வரவு" எனப் பதியப்படுவதால் ரூபா 25,000 காசுப் புத்தகத்தில் வரவு வைக்கப்படும்.

03) 2008.01.04 இல் வணிகத்திற்கு ரூபா 4,500 பெறுமதியான மரத் தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டது. (கச்சாத்து இலக்கம் 001)
- மரத்தளபாடங்களை கொள்வனவு செய்ததால் காசுச் சொத்து ரூபா 4,500 வால் குறையும்
- மரத்தளபாடம் என்னும் வகையில் ரூபா 4,500 பெறுமதியான சொத்து ஒன்று உருவாகும்.
- காசுச் சொத்து ரூபா 4,500 வால் குறைவடைவதால், காசேட்டில் ரூபா 4,500 செலவில் பதியப்படும்.

04) 2008.01.05 இல் விற்பனைக்காக ரூபா 20,000 பெறுமதியான பழங்களைக் கொள்வனவு செய்தார். (கச்சாத்து இல 002)
- வணிகத்தில் காசுச் சொத்து ரூபா 20,000 ஆல் குறைவடையும்.
- பொருட்களின் தொகை (பழங்கள் ) ரூபா 20,000 சொத்து உருவாகும்

- காசு சொத்து ரூபா 20,000 ஆல் குறைவடைவதால் காசேட்டில் செலவில் பதியப்படும்.

05) 2008.01.05 பழங்களைக் கொண்டு வருவதற்காக வாகனத்துக்குச் செலுத்திய கூலி ரூபா 500 (கச்சாத்திலக்கம் 003 )
- வாகனக் கூலியாக ரூபா 500 செலுத்தப்படுவதால் காசு ரூபா 500 வெளிச்செல்லும்.
- வாகனக்கூலியாக ரூபா 500 ஏற்படும்.
- காசுச் சொத்து ரூபா 500 குறைவடைவதால் காசேட்டில் செலவுபக்கத்தில் ரூபா 500 பதியப்படும்.

06) 2008.01.06 காசு ரூபா 3,500 வுக்கு பழங்கள் விற்பனை செய்யப்பட்டன. (பற்றுச் சீட்டு இலக்கம் 002)
- ரூபா 3,500 வியாபாரத்திற்கு கிடைத்தனால் காசுச் சொத்து ரூபா 3,500 அதிகரிக்கும்
- அவ்வேளையில் ரூபா 3,500 விற்பனை வருமானம் உருவாகும்.
- காசு சொத்து அதிகரிப்பதனால் காசுப் புத்தகத்தில் ரூபா 3,500 வரவில் பதியப்படும்.

07) 2008.01.07 கோமதிக்கு ரூபா 4,500 வுக்கு பழங்கள் விற்கப்பட்டன.
- இக் கொடுக்கல் வாங்கல் கடனுக்கு இடம்பெற்றதாகும். கொடுக்கல் வாங்கல்களின் போது காசுப் பரிமாற்றம் இடம் பெறாமையால் காசு பின்பே கிடைக்கப் பெறும்.
- கடனுக்கு பொருட்கள் விற்கப்பட்டதால் கடன்படுநர் எனும் சொத்து உருவாகும். இங்கு கடன்படுநர் கோமதியாகும்.
- கடன் நடவடிக்கை என்றபடியால் இவை காசேட்டில் பதியப்பட மாட்டாது.

08) 2008.01.10 வங்கிக் கடனின் ஒரு பகுதி ரூபா 2,000 மீளச் செலுத்தப்பட்டது (கச்சாத்து இலக்கம் - 004)
- வங்கிக்கடன் செலுத்தப்படுவதனால் காசு சொத்து ரூபா 2,000 குறைவடைந்து 2,000 ரூபா காசேட்டில் செலவு வைக்கப்படும்.
- காசு (சொத்து) 2,000 ரூபா குறைவடைவதனால், வங்கிக் கடன் ரூபா 2,000 ஆல் குறைவடையும்

09) 2008.01.11 பண்டார பழக்கடையிலிருந்து மீள விற்பனைக்காக ரூபா 8,000 பெறுமதியான பழங்கள் கொள்வனவு செய்யப்பட்டன
- கடன் அடிப்படையிலேயே பழங்கள்கொள்வனவு செய்யப்பட்டது. இங்கு காசுப் பரிமாற்றம் இடம்பெறவில்லை.

- கடனுக்குப் பொருட்கள் கொள்வனவு செய்வதனால் பழங்கள் தொடர்பில் செலுத்தவேண்டிய பணம் ஒரு பொறுப்பாகும். இப்பொறுப்பு கடன்கொடுநர் எனக் கொள்ளப்படும். இங்கு கடன்கொடுநர் பண்டார ஆவார்
- கடன் கொடுக்கல் வாங்கல்கள் காசேட்டில் இடம்பெறமாட்டாது.

10) 2008.01.13 கோமதியிடமிருந்து ரூபா 2,500 காசு கிடைத்தது. (பற்றுச் சீட்டு இல 003)
   - வணிகத்திற்கு காசு ரூபா 2,500 கிடைத்ததால் காசுச் சொத்து அதிகரித்துள்ளது.
   - காசுச் சொத்து ரூபா 2,500 அதிகரித்ததனால் ரூபா 2500 காசேட்டில் வரவில் பதியப்படும்.
   - கடன்படுநராகிய சொத்து (கோமதி) ரூபா 2,500 ஆல் குறையும்.

11) 2008.01.14 பண்டார பழக்கடைக்கு காசு 3,000 ரூபா செலுத்தப்பட்டது. (கச். இல 005)
   - கடன்கொடுநருக்கு ரூபா 3,000 கொடுத்ததால் காசுச் சொத்து 3000, ரூபா குறைவடையும்.
   - காசுச் சொத்து ரூபா 3,000 குறைவடைவதால் காசேட்டில் செலவில் ரூபா 3,000 பதியப்படும்.
   - கடன்கொடுநர் எனும் பொறுப்பில் ரூபா 3,000 குறைவடையும்.

12) 2008.01.15 வணிகத்திலிருந்து சொந்தத் தேவைக்காக, சந்திரா 500 ரூபாவை பற்றியுள்ளார். (கச் இல. 006)
   - உரிமையாளரும் வணிகமும் வேறுபட்ட அலகுகள் என்பதை அறிவோம்.
   - உரிமையாளர் ரூபா 500 காசை நிறுவனத்திலிருந்து பற்றியுள்ளமையால் வணிகத்தின் சொத்தில் உள்ள தனது உரிமை (மூலதனம்) குறையும். இத்துடன் வணிகத்தின் காசுச் சொத்து 500 ரூபா குறைவடையும்.
   - காசுச் சொத்து ரூபா 500 குறைவடையும்.
   - இதனால் காசேட்டில் ரூபா 500 செலவில் வைக்கப்படும். இது கணக்கீட்டில் பற்று எனக் காட்டப்படும்.

அடுத்ததாக சந்திரா வணிகத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களைக் காசேட்டில் பதியப்படும் முறை பற்றியும், காசேட்டின் மீதியைக் கணிக்கும் முறை பற்றியும் பின்வருமாறு காட்டலாம்.

பே.ப 1

| வரவு | | | | | காசேடு | | | | செலவு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **திகதி** | **ப.இ** | **விபரம்** | **பே ப** | **காசு** | **திகதி** | **க.இ** | **விபரம்** | **பே ப** | **காசு** |
| 2008 | | | | | 2008 | | | | |
| 01.01 | | மூலதனம் | 02 | 30,000 | 01.04 | 001 | தளபாடம் | 04 | 4,500 |
| 01.02 | 001 | வங்கிக் கடன் | 03 | 25,000 | 01.05 | 002 | கொள்வனவு | 05 | 20,000 |
| 01.06 | 002 | விற்பனை | 07 | 3,500 | 01.05 | 003 | உட்சுமைக் கூலி | 06 | 500 |
| 01.13 | 003 | கோமதி | 08 | 2,500 | 01.10 | 004 | வங்கிக்கடன் | 03 | 2,000 |
| | | | | | 01.14 | 005 | பண்டார பழக் கடை | 09 | 3,000 |
| | | | | | 01.15 | 006 | பற்று | 10 | 500 |
| | | | | | 01.15 | | மீதி.கீ.கொ.செ | எ.ப | 30,500 |
| | | | | 61,000 | | | | | 61,000 |
| 01.16 | | மீதி. கீ.கொ.வ | எ.ப | 30,500 | | | | | |

இவ் வணிகத்தின் கணக்கீட்டுக் காலம் 01.01.2008 தொடக்கம் 15.01.2008 வரையிலாகும். இதன் மூலம் 16.01.2008 அன்று கணிப்பிடப்பட்ட கையிலுள்ள காசு மீதி 30500 ரூபாவாகும்.

## பேரேட்டுப் பதிவுகள்

வணிகக் கொடுக்கல் வாங்கல்களுக்கு இரண்டு விளைவுகள் உண்டு. இவ்விரட்டை விளைவுகள் இரு பேரேட்டுக் கணக்குகளில் வரவு,செலவு எனும் அடிப்படையில் பதிவு செய்யப்படும். காசேடானது பேரேட்டுக் கணக்காகத் தொழிற்படுவதனால், காசுப் பெறுவனவு காசேட்டில் வரவிலும், காசுக்கொடுப்பனவு காசேட்டில் செலவிலும் பதியப்படும்.

இவ்வாறு காசேட்டில் உட்படுத்தப்பட்ட வரவுப்பதிவுகளுக்குரிய செலவுப் பதிவு, அதற்குரிய மற்றைய பேரேட்டுக்கணக்கில் பதிவு செய்யப்படும். காசேட்டில் உட்படுத்தப்பட்ட செலவுப் பதிவுகளுக்குரிய வரவுப்பதிவு, அதற்குரிய மற்றைய பேரேட்டுக்கணக்கில் வரவில் தாக்கல் செய்யப்படும்.

மேற்காட்டிய கொடுப்பனவுக்குரிய பேரேட்டுக் கணக்குகள் கீழே காட்டப் பட்டுள்ளன.

பே.ப 2

வரவு மூலதனக் கணக்கு செலவு

| திகதி | விபரம் | பே ப | தொகை ரூ. | ச | திகதி | விபரம் | பே ப | தொகை ரூ. | ச |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 2008 | | | | |
| | | | | | 01.01 | காசு | 01 | 30,000 | 00 |

பே.ப 3

வரவு வங்கிக் கடன் கணக்கு செலவு

| திகதி | விபரம் | பே ப | தொகை ரூ. | ச | திகதி | விபரம் | பே ப | தொகை ரூ. | ச |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2008 | | | | | 2008 | | | | |
| 01.10 | காசு | 01 | 2,000 | 00 | 01.02 | காசு | 01 | 25,000 | 00 |

பே.ப 4

வரவு தளபாடக் கணக்கு செலவு

| திகதி | விபரம் | பே ப | தொகை ரூ. | ச | திகதி | விபரம் | பே ப | தொகை ரூ. | ச |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2008 | | | | | | | | | |
| 01.04 | காசு | 01 | 4,500 | 00 | | | | | |

பே.ப 5

வரவு கொள்வனவு கணக்கு செலவு

| திகதி | விபரம் | பே ப | தொகை ரூ. | ச | திகதி | விபரம் | பே ப | தொகை ரூ. | ச |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2008 | | | | | | | | | |
| 01.04 | காசு | 01 | 20,000 | 00 | | | | | |
| 01.11 | பண்டார | 09 | 8,000 | 00 | | | | | |

பே.ப 6

வரவு உட்சுமைக்கூலி கணக்கு செலவு

| திகதி | விபரம் | பே ப | தொகை ரூ. | ச | திகதி | விபரம் | பே ப | தொகை ரூ. | ச |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2008 | | | | | | | | | |
| 01.05 | காசு | 01 | 500 | 00 | | | | | |

பே.ப 7

வரவு **விற்பனைக் கணக்கு** செலவு

| திகதி | விபரம் | பே ப | தொகை | | திகதி | விபரம் | பே ப | தொகை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. | ச | | | | ரூ. | ச |
| | | | | | 2008 | | | | |
| | | | | | 01.06 | காசு | 01 | 3,500 | 00 |
| | | | | | 01.07 | கோமதி | 08 | 4,500 | 00 |

பே.ப 8

வரவு **கோமதி கணக்கு** செலவு

| திகதி | விபரம் | பே ப | தொகை | | திகதி | விபரம் | பே ப | தொகை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. | ச | | | | ரூ. | ச |
| 2008 | | | | | 2008 | | | | |
| 01.07 | விற்பனை | 07 | 4,500 | 00 | 01.13 | காசு | 01 | 2,500 | 00 |

பே.ப 9

வரவு **பண்டார பழ நிறுவனக் கணக்கு** செலவு

| திகதி | விபரம் | பே ப | தொகை | | திகதி | விபரம் | பே ப | தொகை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. | ச | | | | ரூ. | ச |
| 2008 | | | | | 2008 | | | | |
| 01.14 | காசு | 01 | 3,000 | 00 | 01.12 | கொள்வனவு | 5 | 8,000 | 00 |

பே.ப 10

வரவு **பற்றுக் கணக்கு** செலவு

| திகதி | விபரம் | பே ப | தொகை | | திகதி | விபரம் | பே ப | தொகை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. | ச | | | | ரூ. | ச |
| 2008 | | | | | | | | | |
| 01.15 | காசு | 01 | 500 | 00 | | | | | |

## செயற்பாடு 02

ராஜன் தனது நிலையான வைப்பிலிருந்து ரூபா 2,50,000 ஐ ரூபாவை மீள எடுத்து 01.01.2008 இல் தைத்த ஆடைகளைக் கொள்வனவு செய்து விற்பனை செய்யும் வியாபார மொன்றில் முதலீடு செய்தார். பற்றுச்சீட்டு, கொடுப்பனவு கச்சாத்து போன்ற மூல ஆவணங்களை அச்சடிப்பதற்காக 2,500 ரூபாவைச் செலவிட்டார். ஜனவரி மாதத்தில் கொடுக்கல் வாங்கல்களின் மூலப் பதிவுகள் அவரால் மேற்கொள்ளப்பட்டன. பற்றுச்சீட்டுக்களை பரிசீலனை செய்தபோது பின்வரும் தகவல்கள் பெறப்பட்டன.

| திகதி | ப.சீ | விபரம் |
|---|---|---|
| 2008 | | |
| 01.05 | 001 | ஒன்று 650 படி 15 சேட்டுக்கள் விற்பனை |
| 01.08 | 002 | கோகிலனிடமிருந்து பெற்ற காசு ரூபா 3000 |
| 01.12 | 003 | ஒன்று ரூபா 400 வீதம் சிறுவர் ஆடைகள் 10 விற்பனை |
| 01.16 | 004 | கோகிலனிடமிருந்து ரூபா 5000 பெறப்பட்டது |
| 01.18 | 005 | ஒன்று ரூபா 800 படி 20 சேலைகள் விற்பனை |
| 01.25 | 006 | கோகிலனிடமிருந்து பெற்ற காசு ரூபா 4000 |
| 01.28 | 007 | ஒன்று ரூபா 1200 படி 15 காற்சட்டைகள் விற்பனை |
| 01.29 | 008 | கோகிலனிடமிருந்து ரூபா 3000 பெறப்பட்டது |
| 01.30 | 009 | ஒன்று ரூபா 700 படி 20 சேட்டுக்கள் விற்பனை |

கொடுப்பனவுக் கைச்சாத்து தொடர்பான தகவல்கள் வருமாறு

| திகதி | ப.சீ | விபரம் |
|---|---|---|
| 2008 | | |
| 01.01 | 500 | நிறுவனத் தேவைக்கு ரூ.8000 மரத் தளபாடங்கள் வாங்கப்பட்டன. |
| 01.02 | 501 | ஒன்று 400 படி 50 சேட்டுக்கள் கொள்வனவு |
| 01.02 | 502 | உட்சுமைக் கூலி ரூபா 600 செலுத்தப்பட்டது |
| 01.06 | 503 | கட்டிட வாடகை ரூபா 2000 செலுத்தப்பட்டது |
| 01.09 | 504 | ஒன்று ரூபா 225 படி 60 சிறுவர் ஆடைகள் கொள்வனவு |
| 01.13 | 505 | நிமலனுக்கு ரூபா 12,000 செலுத்தப்பட்டது |
| 01.20 | 506 | ஊழியர் சம்பளம் ரூபா 3,000 செலுத்தப்பட்டது |
| 01.22 | 507 | ஒன்று ரூபா 750 படி 40 காற்சட்டைகள் கொள்வனவு |
| 01.22 | 508 | உட்சுமைக் கூலி ரூபா 600 செலுத்தப்பட்டது |
| 01.24 | 509 | நிமலனுக்கு ரூபா 16,000 செலுத்தப்பட்டது |
| 01.25 | 510 | ஊழியர் சம்பளம் ரூபா 3,000 செலுத்தப்பட்டது |
| 01.28 | 511 | ஒன்று ரூபா 480 படி 60 சேலைகள் கொள்வனவு |
| 01.30 | 512 | கட்டிட வாடகை ரூபா 2000 செலுத்தப்பட்டது |
| 01.31 | 513 | நிமலனுக்கு ரூபா 8000 செலுத்தப்பட்டது |

பின்வருவனவற்றைக் காண்க.

01. காசுப் பெறுவனவு, காசுக் கொடுப்பனவுகளுக்கு உரிய மூல ஆவணங்களைக் குறிப்பிடுக.
02. ராஜன் வணிகத்தின் காசுப் பெறுவனவுகளையும், காசுக் கொடுப்பனவுகளையும் காசேட்டில் பதிவு செய்க.
03. 2008.01.31 இல் காசேட்டைச் சமப்படுத்தி காசு மீதியைக் கண்டறிக.
04. காசேட்டில் பதியப்பட்ட தகவல்களுக்குரிய பேரேட்டுக் கணக்குப் பதிவுகளைத் தருக.
05. இப்பயிற்சியில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களுக்கு மேலதிகமாக நிறுவனத்திற்குக் காசு பெறப்படும் வழிமுறைகளையும், காசு செலவழிக்கப்படும் வழி முறைகளையும் வேறு வேறாகக் குறிப்பிடுக.

## இருநிரல் காசேடு


காசு, காசோலை என்பவற்றின் மூலம் இடம்பெறும் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்ய பயன்படும் காசோடு **இரு நிரல் காசேடு** எனப்படும். இக்காசேடு ஒரு நிரல் காசேட்டில் பெறுமதியைக் குறிப்பிடும் காசு நிரலுக்கு மேலதிகமாக வங்கி நிரலையும் சேர்த்துக்கொள்ளப்படும் வணிகவங்கியொன்றில் பேணப்படும் நடைமுறைக்கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்படும் காசுக் கொடுக்கல் வாங்கல்கள் வங்கி நிரலில் பதியப்படும். வங்கி நிரலில் பதிவுகளை உள்ளடக்குவதற்கு அதற்குரிய மூல ஆவணங்களை கவனத்தில் கொள்ள வேண்டும்.அவ்வாறான மூலஆவணங்கள் வருமாறு.

| சந்தர்ப்பம் | மூல ஆவணம் |
|---|---|
| ● காசு வைப்புச் செய்தல் | காசு வைப்புத் துண்டு |
| ● காசோலை வைப்புச் செய்தல் | காசோலை வைப்புத் துண்டு |
| ● காசோலை வழங்கல் | அடிக்கட்டை (அடியிதழ்) |
| ● காசோலை மறுக்கப்படல் | காசோலை மறுப்பறிவித்தல் பற்றிய கடிதம் |
| ● காசேட்டில் பதியப்படாத வங்கிக் கொடுக்கல வாங்கல்களைக் காசேட்டில் பதிவு செய்தல | வங்கிக் கூற்று |

## காசு வைப்புத் துண்டு

காசு வைப்புச் செய்யும் போது காசு வைப்புத்துண்டு பயன்படுத்தப்பட்டு நடைமுறைக்கணக்கில் வைப்பிலிடப்படும். இரு பிரதிகளில் தயாரிக்கப்படும் வைப்புத்துண்டின் பிரதி கணக்கு வைத்திருப்பவர்களுக்கு (நிறுவனத்திற்கு) வழங்கப்படும். வங்கி நிரலில் இத்தொகையைப் பதிவு செய்வதற்கு இப் பிரதி மூல ஆவணமாகப் பயன்படுத்தப்படும்.


காசு வைப்புத் துண்டின் மாதிரி வருமாறு


BOC/Suppl/S 701197
Deposit Credit
BOC
ශාඛාව
கிளை
Branch
මුදල් තැන්පතුව பண வைப்பு
CASH DEPOSIT
දිනය
திகதி
Date
ගිණුම් හිමියාගේ නම கணக்கு வைத்திருப்பவரின் பெயர் Name of Account Holder
ගිණුම් අංකය கணக்கு இலக்கம்
Account Number
වෙනත් විස්තර ஏனைய விபரங்கள் Any other Particulars
ගණන தொகை Amount
රු.
ரூ.
Rs.
තැන්පත්කරුගේ අත්සන வைப்புச் செய்பவரின் ஒப்பம் Depositor's Signature
යන්ත්‍ර මුද්‍රාව හෝ නිල අත්සන ඇත්නම් වලංගුයි யந்திர அச்சு அல்லது அதிகார ஒப்பத்தில் செல்லுபடியாகும் Valid with Machine Print or Official Signature
70056 - CA1 (OCT-88) 1-2 D. Ranasinghe & Sons

## காசோலை வைப்புத் துண்டு

வணிகத்திற்குக் கிடைக்கும் காசோலைகளை வங்கியில் வைப்புச் செய்வதற்கு காசோலை வைப்புத் துண்டு பயன்படுத்தப்படும். இருபிரதிகளில் தயாரிக்கப்படும். இதன் பிரதி கணக்கு வைத்திருப்பவர்களுக்கு (நிறுவனத்திற்கு) வழங்கப்படும். வங்கி நிரலில் பதிவு செய்வதற்கு இப்பிரதி மூல ஆவணமாகப் பயன்படுத்தப்படும்.

**காசோலை வைப்புத் துண்டு வருமாறு**





வங்கி நடைமுறைக்கணக்கில் காசு, காசோலை ஆகிய இரண்டையும் வைப்புச்செய்யும் போது இரண்டிற்கும் ஒரே படிவத்தைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்களும் உண்டு. அதுவும் இரண்டு பிரதிகளில் தயாரிக்கப்படும். இதன் பிரதி நிறுவனத்திற்கு (கணக்கு வைத்திருப்பவருக்கு) வழங்கப்படும். காசேட்டில் பதிவு செய்வதற்கு இப்பிரதி மூல ஆவணமாகப் பயன்படுத்தப்படும்.

## காசோலை அடியிதழ்

பல்வேறு கொடுப்பனவுகளுக்காகக் காசோலை வழங்கப்படும் பொழுது அதற்குரிய மூலத் தகவல்கள் காசோலையின் இடப்பக்கத்தில் இருக்கும் பகுதியில் குறிப்பிடப்படும். வலது பக்கத்தில் உள்ள காசோலையை வேறாக்கி வழங்கப்பட்ட பின், உரிய முக்கிய தகவல்கள் காசோலையின் இடப் பக்கத்தில் உள்ள சிறிய பகுதியில் காணப்படும். இச் சிறிய பகுதி, அடியிதழ் என அழைக்கப்படுவதோடு காசேட்டில் பதிவு செய்வதற்கான மூல ஆவணமாகப் பயன்படுத்தப்படும்.

பின்வரும் கசோலையில் பகுதி I இல் காட்டப்படுவது அடியிதழாகும். பகுதி II இல் காட்டப்படுவது காசோலையாகும்.

பகுதி I பகுதி II




## மறுக்கப்பட்ட காசோலை அறிவித்தல் படிவம். (Cheque Return Notification)

வைப்புச் செய்வதற்காக அல்லது கொடுப்பனவுக்காக வங்கிக்குச் சமர்ப்பிக்கும் காசோலைகளின் கொடுப்பனவுகள் பல்வேறு காரணங்களினால் நிராகரிக்கப்படலாம். இது காசோலை மறுக்கப்படல் எனக் கொள்ளப்படும். இவ்வாறு மறுக்கப்பட்ட காசோலைகள் வைப்புச் செய்த வாடிக்கையாளருக்கு மீண்டும் அனுப்புவதற்கான புதிய நடைமுறைகள் தற்போது உள்ளன. இதற்காக மறுக்கப்பட்ட காசோலைகளுக்குப் பதிலாக வைப்பாளர்களுக்குக் கிடைக்கப்பெறுவது மறுக்கப்பட்ட காசோலை தொடர்பான அறிவித்தலாகும்.

இதில் மறுக்கப்பட்ட காசோலை தொடர்பான அனைத்து விடயங்களும் அடங்கியிருக்கும். மறுக்கப்பட்ட காசோலைக்குப்பதிலாக இடம்பெறக் கூடிய விபரங்கள் அடங்கிய இப்படிவத்தை மூலக்காசோலைக்குப்பதிலாக காசோலையை வழங்கிய நபருக்கு சமர்ப்பித்து மீண்டும் புதிய காசோலை ஒன்றையோ அல்லது பணத்தையோ பெறுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளமுடியும்.

"மறுக்கப்பட்ட காசோலை தொடர்பான அறிவித்தல்". மாதிரி வருமாறு


LANKACLEAR

(A) Retained by the Customer

CITS

Cheque Return Notification (CRN)
Permitted to use as a replacement for the returned cheque

Customer's Copy
01 - 000001
LCPL - Colombo
Date: 03-Oct-2005

Presenting Bank: Standard Chartered Bank

Return Cheque Information

Customer's Name & Address

UI இலக்கம் / UI Number : 20050930701100101106500002
தொகை (ரூபா) / Amount (Rs.) : 200.00
செலுத்தும் வங்கி / Paying Bank : DB Bank
காசோலை இலக்கம் / Cheque Number : 661205
கணக்கு இலக்கம் / Account Number :
திருப்பி அனுப்பப்படுவதற்கான காரணம் / Return Reason : Stale Cheque (50) Rt From Kandy RC

(B) Retained by the Collecting Bank

CITS

Advice for Cheque Re-presentment

Bank's Copy A
01 - 000001
LCPL - Colombo
Date: 03-Oct-2005

Presenting Bank: Standard Bank

Cheque Information
Unique Identifier (UI) : 20050930701100101106500002
Amount (Rs.) : 200.00
Cheque Number : 661205
Paying Bank : DB
Paying Branch: Pussallawa

First Return – This CRN can be represented only to the original presenting bank subject to conditions

Clearing Information: First Return
Return Reason/Code: Stale Cheque (50) Rt From Kandy RC

Presenting Branch: Citi Office
Presenting LCPL Centre: Colombo
Date of Return: 03-Oct-2005

Conditions
1. CRN with any mutilation or tear will not be accepted.
2. CRN will be retained when presented to our bank.
3. To be presented on a clearing day not later than 30-Mach-2006 or 6 months from the cheque date, whichever is earlier.

(C) To be forwarded for Cheque Clearing by the Collecting Bank

CITS

Cheque Status: Re-presentable

Bank's Copy B
01 - 000001
LCPL - Colombo
Date: 03-Oct-2005

Presenting Bank: Standard Bank

DB BANK
200.00

20050930701100101106500002 7735-274 00000020000

## வங்கிக் கூற்று (Bank Statement)

வணிகத்திற்கு (நடைமுறைகணக்கு வைப்பாளருக்கு), வங்கியுடன் இடம்பெற்றகொடுக்கல்வாங்கல்கள் பற்றிய விபரங்களை உள்ளடக்கி வணிக வங்கியினால்அனுப்பப்படும் அறிக்கை **வங்கிக் கூற்று** எனப்படும் இது வங்கிக் கணக்கு விபரம் எனவும் அழைக்கப்படும். காசேட்டின் வங்கி நிரலில் உள்ளடக்கியுள்ள தகவல்களைப் பரிசீலனை செய்வதற்கும், காசேட்டில் உள்ளடக்கப்படாத தகவல்களை உள்ளடக்குவதற்கும் இவ்வங்கிக் கூற்று, மூல ஆவணமாக பயன்படுத்தப்படும். இதுபொதுவாக மாதாந்தம் வங்கியால்அனுப்பப்படும்.

லோவர் வீதி
பதுளை கிளை
பதுளை.

BOC
BANK OF CEYLON
சந்திரா ஸ்டோர்ஸ்

கணக்கு இலக்கம்

Account Number

Currency

| Date | Particulars | Payments | Receipts | Balance |
|---|---|---|---|---|
| 1.3.2008 | மீதி | | | 16,000 |
| 3.3.2008 | காசு வைப்பு | | 13,000 | 29,000 |
| 8.3.2008 | காசோலை கொடுப்பனவு AB 06 | 7,000 | | 22,000 |
| 14.3.2008 | காசோலை வைப்புCd 218 | | 8,700 | 30,700 |
| 20.3.2008 | காசோலை கொடுப்பனவு AB 07 | 12,400 | | 18,300 |
| 22.3.2008 | நிலையியல் கட்டளை. (வங்கிக் கடன்) | 14,000 | | 4,300 |
| 25.3.2008 | கடன்படுநர் நேரடி வைப்பு | | 8,400 | 12,700 |
| 28.3.2008 | காசோலை வைப்பீசு. 425 | | 6,000 | 18,700 |
| 30.3.2008 | பங்கிலாபம் | | 4,900 | 23,600 |
| 30.3.2008 | வரி | 800 | | 22,800 |
| 31.3.2008 | வங்கிக் கட்டணம் | 1,200 | | 21,600 |
| | | | | 21,600 |

All the transactions shown on the statement should be verified and the Bank notified of any discrepancy immediately.
Any query relating to transactions beyond 03 months may be subject to levy of a fee.
Unrealised cheque deposits, if any are included in the Closing balance.

### செயற்பாடு 03

நீங்கள் உங்கள் இரு நண்பர்களுடன் சேர்ந்து பின்வரும் படிவங்களைச் சேகரித்துக் கலந்துரையாடுக.

01. வெவ்வேறு வங்கிகளின் காசு, காசோலை வைப்பிலிடும் படிவம்.
02. வெவ்வேறு வங்கிகளில் பயன்படுத்தப்படும் காசோலைப் புத்தகம் அல்லது காசோலைகள்
03. வெவ்வேறு வங்கிகளின் மூலம் வழங்கப்பட்ட வங்கிக் கூற்றுக்கள்

## இருநிரல் காசேட்டில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல்

இருநிரல் காசேட்டில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்யப் பயன்படுத்தும் மூல ஆவணங்களைப் பற்றி அறிந்து கொண்ட பின், அடுத்ததாக இரு நிரல் காசேட்டில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதற்குரிய தகவல்களைப் பற்றி ஆராய்வோம்.

## வைப்பு

நடைமுறைக் கணக்கு ஒன்றில் வைப்பிலிடக்கூடியவை
01. கையிலுள்ள காசு (தாள் நாணயங்களும் குற்றி நாணயங்களும்)
02. காசோலைகள்

கையிலுள்ள காசை வைப்புச் செய்யும் போது வணிகத்திலுள்ள தாள், குற்றி நாணயங்களின் தொகை குறைவடைவதுடன் வங்கியில் நடைமுறைக் கணக்கில் உள்ள காசுத் தொகை அதிகரிக்கும். இந்நிலைமை காசேட்டில் காசு, வங்கி ஆகிய இரு நிரல்களிலும் விளைவை ஏற்படுத்தும். இதன்படி பணத்தை வங்கியில் வைப்பிலிடும்போது, வங்கி நடைமுறைக் கணக்கில் பணத்தின் அளவு அதிகரிப்பதனால் வங்கி நிரலில் வரவு வைக்கப்படும். கையிலுள்ள காசின் அளவு குறைவடைவதால் காசு நிரலில் செலவு வைக்கப்படும்.

காசு நிரலும், வங்கி நிரலும் சொத்துக்கள் தொடர்பான இரட்டை பதிவு முறைமைக்கு அமையவும் பதிவு செய்யப்படும். வரவு, செலவு ஆகிய இரு பதிவுகளும் காசேட்டில் எதிர் எதிர் பக்கங்களில் இடம் பெறுவதால் பேரேட்டுப் பக்க நிரலில் எ.ப. என குறுகிய குறியீட்டால் காண்பிக்கப்படும். எ.ப. என்பது **எதிர்ப் பதிவு** எனும் பதத்தின் சுருக்கமாகும்.

நிறுவனத்திற்குக் கிடைக்கும் காசோலைகள் வங்கியில் வைப்பு செய்யப்படும் வரை முதலில் காசு நிரல் வரவில் பதியப்பட்டு உரிய மற்றைய பேரேட்டு கணக்கில் செலவு வைக்கப்படும். அவ்வாறு கிடைக்கப்பெற்ற காசோலைகள் வேறு ஒரு தினத்தில் வங்கியில் வைப்புச் செய்யும் போது வங்கி நிரலில் வரவு வைக்கப்பட்டு காசு நிரலில் செலவு வைக்கப்படும். இதற்கும் காசேட்டுப் பேரேட்டுப் பக்க நிரலினுள் எ.ப (எதிர் பதிவு) இடம்பெறும்.

## காசோலைகளை வழங்குதல்

காசோலைகள் மூலம் கொடுப்பனவு செய்யும் போது நடைமுறைக் கணக்கிலுள்ள காசுத் தொகை குறைவடையும். இது சொத்துக் குறைவடைவதற்குக் காரணமாக அமைவதால் வங்கி நிரலில் செலவு வைக்கப்படும். வரவுப் பதிவானது உரிய பேரேட்டுக் கணக்கில் இடம்பெறும்.

## காசோலை மறுக்கப்படல்

நடைமுறைக் கணக்கில் போதியளவு காசின்மை, காசோலை முறையாக எழுதப்படாமை, மாதிரிக் கையொப்பதிற்குப் பதிலாக காசோலையில் இடப்பட்டிருக்கும் கையொப்பம் வேறுபடல் போன்ற காரணங்களினால் காசோலை ஒன்று மறுக்கப்படலாம். அவ்வாறு மறுக்கப்பட்ட காசோலைகள்

இருவகையாகவும் அமையலாம்.

- வைப்புச் செய்யப்பட்ட காசோலை
- வழங்கிய காசோலை

நிறுவனத்தினால் வைப்புச் செய்யப்பட்ட காசோலை மறுக்கப்படும்போது மறுப்பறிவித்தல் கடிதம் மூலமாக நிறுவனத்திற்கு அறிவிக்கப்படும்.

வைப்புச் செய்யப்பட்ட காசோலையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை வங்கி நிரலில் வரவு வைக்கப்பட்டிருக்கும். ஆயினும் காசோலைகள் மறுக்கப்பட்டால் வங்கியில் உள்ள காசு அதிகரிக்காது. ஆகையால் வங்கி நிரலில் வரவு வைத்த பெறுமதி அதிலிருந்து நீக்கப்படவேண்டும். காசோலையை வழங்கிய கட்சியினரை மீண்டும் கடன்பட்டோராக உருவாக்க வேண்டும்.

- முதலாவது படிமுறை - வைப்புச் செய்து மறுக்கப்பட்ட, காசோலை ஒன்று கிடைக்கப்பெறும் போது மறுக்கப்பட்ட காசோலைக் கணக்கு - வரவு, வங்கி நிரல் செலவு வைக்கப்பட வேண்டும்.
- இரண்டாவது படிமுறை - மறுக்கப்பட்ட காசோலை கடன்பட்டோருக்கு அனுப்பப்படும் பொழுது (அறிவித்தல் கொடுத்தவுடன்)

கடன்பட்டோர் கணக்கில் வரவு வைத்து, மறுக்கப்பட்ட காசோலைக் கணக்கில் செலவு வைக்க வேண்டும்.

நிறுவனத்தினால் வழங்கப்பட்ட காசோலையும் மறுக்கப்படலாம். அவ்வாறு மறுக்கப்பட்ட காசோலை அக் கொடுக்கல் வாங்கல்களுக்கு உரியவரினால் மீண்டும் நிறுவனத்துக்கு அனுப்பப்படும். காசோலை மறுக்கப்படுவதற்கு முன்பு வைத்துள்ள பதிவை நீக்குவது இங்கு இடம் பெற வேண்டும். இதற்கு வங்கி நிரலில் வரவு வைத்து உரிய மற்றைய பேரேட்டுக் கணக்கில் செலவு வைத்தல் அவசியமானதாகும்.

## வணிகத்தின் தேவைக்கு வங்கியிலிருந்து பணத்தை மீளப் பெறல்

நிறுவனத்தின் தேவைக்கு காசோலை வரைந்து வங்கியிலிருந்து காசை மீளப்பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பங்களும் உண்டு. இந்நிலையில் கையிலுள்ள காசுத் தொகை அதிகரிப்பதுடன் வங்கி நடைமுறைக்கணக்கிலுள்ள காசுத் தொகை குறைவடையும். இந்நிலைமையில் காசு நிரலில் வரவுப்பதிவும், வங்கி நிரலில் செலவுப்பதிவும் இடம் பெறும். இதற்கும் காசேட்டுப் பேரேட்டுப் பக்க நிரலினுள் எ.ப (எதிர் பதிவு) இடம்பெறும்.

### காசோலையைக் காசாக மாற்றுதல்

வெளி நபர், அல்லது நிறுவனமொன்றின் காசோலையை மாற்றிக் கொடுப்பதற்காக நிறுவனம் காசோலைகளை பெற்றுக்கொள்ளும். இங்கு தரகுப்பணம் பெற்றுக்கொண்டு அல்லது பெற்றுக் கொள்ளாமல் காசோலையை மாற்றிக் கொடுக்கும்.

## காசேட்டில் இடம்பெறும் எதிர்ப்பதிவு

வரவு, செலவு ஆகிய இரு பதிவுகளும் காசேட்டில் இடம்பெறும் போது அது எதிர்ப்பதிவு எனப்படும். அவ்வாறு எதிர்ப்பதிவு உருவாகும் சந்தர்ப்பங்கள் வருமாறு

01. தாள், குற்றி நாணயங்களாக உள்ள காசு, வங்கியில் வைப்புச் செய்தல்.
02. கிடைக்கப்பெற்ற காசோலைகள் வங்கியில் வைப்புச் செய்தல்
03. வியாபாரத் தேவைக்கு காசோலை வரைந்து வங்கியிலிருந்து காசு மீளப் பெறல்

### இருநிரல் காசேட்டைச் சமப்படுத்தல்

கணக்கீட்டுக் கால முடிவில் இரு நிரல் காசேட்டைச் சமப்படுத்தி மீதியைக் கணிப்பிட வேண்டும். இங்கு,

- காசு நிரல் நிச்சயமாக வரவு மீதியைக் காட்டும். இது சொத்தாகும்.
- வங்கி நிரல் மீதி வரவு மீதியாகவோ அல்லது செலவு மீதியாகவோ அமையலாம்.

வரவு மீதியாயின் நிறுவனத்தின் வங்கி நடைமுறைக் கணக்கில் காசு மீதியாக உள்ளதென்பதைக் குறிக்கும். இது சொத்தாகும். செலவு மீதியாயின், அதன் கருத்து வணிகம், வங்கியிடமிருந்து கடன்பட்டுள்ளது என்பதாகும். வங்கியின் அனுமதியுடன் நடைமுறைக் கணக்கிலுள்ள பணத் தொகையை விடக், கூடுதலான பெறுமதிக்குக் காசோலைகளை வரைவதனால் இந்நிலை உருவாகும். இது வங்கி மேலதிகப்பற்று எனப்படுவதுடன் நிறுவனத்தின் பொறுப்பொன்றுமாகும்.

இரு நிரல் காசேட்டில் கொடுக்கல் வாங்கல்களைப் பதியும் முறையையும் கணக்கீட்டுக் கால முடிவில் அதன் மீதியைக் கணிப்பிடும் முறையையும் பின்வரும் உதாரணம் மூலம் காட்டப்பட்டுள்ளது.


**உதாரணம்**

01.02.2008 இல் சந்திரா வணிகத்தில் உள்ள காசு மீதி ரூபா 42,000 ஆகும். பெப்ரவரி மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு

| திகதி | காசோலை இலக்கம் | விபரம் |
|---|---|---|
| 2008 | | |
| 02.03 | | ரூபா 30,000 இட்டு நடைமுறைக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டது |
| 02.05 | | காசு விற்பனை ரூபா 9,000 |
| 02.08 | AB 01 | மீள் விற்பனைக்கான பொருட்கள் ரூபா 12000/= காசோலை மூலம் கொள்வனவு |
| 02.10 | AB 02 | கட்டிட வாடகை ரூபா 2,000 செலுத்தப்பட்டது |
| 02.12 | AB 03 | சம்பளமாக வழங்கிய காசோலை ரூபா 3,000 |
| 02.13 | AB 03 | சம்பளமாக வழங்கிய காசோலை மறுக்கப்பட்டுள்ளது |
| 02.14 | | மறுக்கப்பட்ட காசோலைக்குப் பதிலாக காசு செலுத்தப்பட்டது |
| 02.15 | SP 24 | பொருள் விற்பனை மூலமாக ரூபா 8,000 காசோலை கிடைத்தது |
| 02.16 | SP 24 | கிடைக்கப்பெற்ற காசோலை வங்கியில் வைப்புச் செய்யப்பட்டது |
| 02.17 | MT19 | கோபாலிடமிருந்து ரூபா 5,000 காசோலை கிடைக்கப்பெற்றது |
| 02.18 | MT 19 | கிடைக்கப்பெற்ற காசோலை வங்கியில் வைப்பு செய்யப்பட்டது |
| 02.20 | AB 04 | காசோலை வரைந்து நிறுவனத் தேவைக்கு ரூபா 7,000 வங்கியிலிருந்து பெறப்பட்டது |
| 02.21 | MT 19 | வைப்புசெய்யப்பட்ட கோபாலின் காசோலை மறுக்கப்பட்டது |
| 02.24 | AB 05 | கட்டிட வாடகைக்காக ரூபா 2,000 காசோலை யொன்று வழங்கப்பட்டது |
| 02.25 | | மறுக்கப்பட்ட காசோலை தொடர்பாக கோபாலிடமிருந்து காசு பெறப்பட்டது. |
| 02.26 | | வங்கியில் ரூபா 6,000 வைப்புச் செயய்யப்பட்டது |
| 02.27 | CD4 | ரஹீமுக்கு ரூபா 3000 பெறுமதியான காசோலை மாற்றிக் கொடுக்கப்பட்டது |
| 02.28 | CD 45 | கிடைத்த காசோலை வங்கியில் வைப்புச் செய்யப்பட்டது |

**வரவு** **காசேடு** **செலவு**

| திகதி | ப இ | விபரம் | பே ப | காசு | வங்கி | திகதி | ப இ | விபரம் | பே ப | காசு | வங்கி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2008 | | | | | | 2008 | | | | | |
| 02.01 | | மீதி.கீ.கொ.வ | | 42000 | | 2.3 | | வங்கி | எ.ப | 30000 | |
| 02.03 | | காசு | எ.ப | | 30000 | 2.8 | | கொள்வனவு | | | 12000 |
| | | | | | | | | AB 01 | | | |
| 02.05 | | விற்பனை | | 9000 | | 2.10 | | கட்டடவாடகை | | | 2000 |
| 02.13 | | சம்பளம்(மறுக்க | | | | | | AB 02 | | | |
| | | ப்பட்டகாசோலை) | | | 3000 | 2.12 | | சம்பளம் | | | 3000 |
| | | AB 03 | | | | | | AB 03 | | | |
| 02.15 | | விற்பனை Sp24 | | 8000 | | 2.14 | | சம்பளம் | | 3000 | |
| 02.16 | | காசு Sp24 | எ.ப | | 8000 | 2.16 | | வங்கி MT 19 | எ.ப | 8000 | |
| 02.17 | | கோபால் | | | | | | | | | |
| | | (கா.இல.MT19) | | 5000 | | 2.18 | | வங்கி | எ.ப | 5000 | |
| 02.18 | | காசு MT 19 | எ.ப | | 5000 | 2.20 | | காசு | | | |
| | | | | | | | | (AB 04) | எ.ப | | 7000 |
| 02.20 | | வங்கி AB04 | எ.ப | 7000 | | 2.21 | | கோபால் | | | 5000 |
| 02.25 | | கோபால் | | 5000 | | 2.24 | | கட்டடவாடகை | | | |
| | | | | | | | | AB 05 | | | 2000 |
| 02.26 | | காசு | எ.ப | | 6000 | 2.26 | | வங்கி | எ.ப | 6000 | |
| 02.27 | | காசோலை | | | | 2.27 | | காசோலை | | | |
| | | (அ.ரஹீம்) CD45 | | 3000 | | | | (மாற்றல் | | | |
| | | | | | | | | அ. ரஹீம்) | எ.ப | 3000 | |
| | | காசு CD 45 | எ.ப | | 3000 | 2.28 | | வங்கி | எ.ப | 3000 | |
| | | | | | | | | மீதி.கீ. | எ.ப | 21000 | 24000 |
| | | | | | | | | கொ.செ | | | |
| | | | | 79000 | 55000 | | | | | 79000 | 55000 |
| 03.01 | | மீதி.கீ.கொ.வ | | 21000 | 24000 | | | | | | |



## செயற்பாடு 04

பின்வரும் மூல ஆவணங்கள் எச்சந்தர்ப்பங்களில் உருவாகும் என்பதைக் குறிக்க.

- பற்றுச்சீட்டு -
- கொடுப்பனவுக் கச்சாத்து -
- அடியிதழ் -
- காசு வைப்பு துண்டு -
- காசோலை வைப்புதுண்டு -
- வங்கிக் கூற்று -

## செயற்பாடு 05

நிமலனின் வியாபாரத்தில் 20xx.01.01 இல் காணப்பட்ட மீதிகள்வருமாறு

| | |
|---|---|
| காசு மீதி ரூபா | 38,000 |
| வங்கி மீதி வரவு ரூபா | 15,000 |
| கடன்படடோர் ரூபா | 20,000 |
| கடன்கொடுத்தோர் ரூபா | 18,000 |
| வங்கிக் கடன் ரூபா | 30,000 |

ஜனவரி மாதத்தில் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு

2008

01.03 கொள்வனவு - காசாக ரூபா 16,000 காசோலை மூலமாக ரூபா 14,000

01.05 கடன்பட்டோரிடமிருந்து பெற்றது காசாக ரூபா 4,000 காசோலையாக ரூபா 3,000

01.07 கிடைத்த காசோலை வங்கியில் இடப்பட்டது

01.10 கடன்கொடுத்தோருக்கு செலுத்தப்பட்டது காசாக ரூபா 5,000/- காசோலையாக ரூபா 4,000

01.12 கடன்பட்டோரிடம் இருந்து பெற்ற காசோலை மறுக்கப்பட்டது

01.15 காசோலை மறுக்கப்பட்டது பற்றி கடன்பட்டோருக்கு அறிவிக்கப்பட்டது

01.18 மறுக்கப்பட்ட காசோலைக்காக கடன்பட்டோரிடமிருந்து காசு பெறப்பட்டது

01.20 வங்கிக் கடனில் ஒரு பகுதியைத் தீர்ப்பதற்காக ரூபா 2,000 பெறுமதியான காசோலை வழங்கப்பட்டது.

01.22 கடன்கொடுத்தோருக்கு வழங்கிய ரூபா 4,000 பெறுமதியான காசோலை மறுக்கப்பட்டது

01.23 மறுக்கப்பட்ட காசோலைக்காக கடன்கொடுத்தோருக்குக் காசு செலுத்தப்பட்டது

01.24 கடன்பட்டோரிடம் இருந்து ரூபா 5,000 பெறுமதியான காசோலை கிடைத்தது.

01.25 சஞ்ஜய் என்பவருக்கு ரூபா 4 000 பெறுமதியான காசோலை மாற்றி கொடுக்கப் பட்டது

01.27 பெற்ற காசோலையுடன் ரூபா 2 000 காசுடன் சேர்த்து வங்கியில் வைப்புச் செய்யப்பட்டது.

01.28 ரூபா 15,000 பெறுமதியான காசோலை வழங்கி, மீள் விற்பனைக்கான பொருள் கொள்வனவு செய்யப்பட்டது.

01.30 வியாபாரத் தேவைக்கு காசோலை வரைந்து ரூபா 5,000 வங்கியிலிருந்து பணம் மீளப் பெறப்பட்டது.

### தேவைப்படுவது

01. 31.01.20xx இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான காசேட்டைத் தயாரிக்குக
02. காசேட்டைச் சமப்படுத்தி மீதியைக் கணிக்குக.
03. காசேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களுக்கு பேரேட்டுப்பதிவுகளைக் காட்டுக
04. காசேடு தொடர்பாக பின்வரும் விடயங்களைப் பற்றி உங்களது கருத்தை விபரிக்குக
    - வங்கி நிரலின் செலவு மீதி
    - **காசேட்டில் காணப்படும் எதிர்ப்பதிவுகள்.**

## 5.3 வங்கி கணக்கிணக்கக் கூற்று (Bank reconcilation statement)

சந்திரா ஸ்டோர்ஸ்

| திகதி | விபரம் | வங்கி | திகதி | விபரம் | வங்கி |
|---|---|---|---|---|---|
| 03.01 | மீதி | 16000 | 03.05 | காசோலை யுஇ 318 | 7000 |
| | வைப்பு | 13000 | | காசோலை யுஇ 319 | 12400 |
| | | | | காசோலை யுஇ 320 | 15400 |
| | | | | காசோலை யுஇ 321 | 6200 |
| | | | | மீ.கீ.கொ.செ | 19800 |




| சந்திரா ஸ்ரோஸ் வங்கிக் கூற்று | | | |
|---|---|---|---|
| திகதி | வரவு | செலவு | மீதி |
| | | | 16,000 |
| | | 13,000 | 29,000 |
| | 7,000 | | 22,000 |
| | 14,000 | | 8,000 |
| | | 8,400 | |
| | | 600 | |
| | | 4,600 | 21,600 |

வணிக நிறுவனம் தனது காசேட்டின் வங்கி நிரலில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிந்த பின் பொதுவாக அம்மாத இறுதித் திகதியில் சமப்படுத்தி மீதியைக் கணிக்கும். இவ்வாறே வணிக வங்கியும் நடைமுறைக் கணக்கில் உள்ள தகவல்களைக் குறிப்பிட்டு அக்காலப்பகுதிக்குரிய கணக்கு விபரம் ஒன்றை நிறுவனத்துக்கு (வாடிக்கையாளருக்கு) அனுப்பும். இது **வங்கிக் கூற்று** ஆகும்.

வங்கி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள மீதிக்கும் வங்கிக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள மீதிக்கும் இடையே வேறுபாடு காணப்பட முடியும். இவ்வாறு மீதிகளின் வேறுபாட்டிற்கான காரணங்களைக் கண்டறிய வேண்டும். இதன் பின் காசேட்டின் வங்கி மீதியைச் சீராக்கி வங்கிக் கணக்கிணக்கக் கூற்றைத் தயாரித்தல் வேண்டும். வங்கி மீதிகளின் வேறுபாட்டுக்கான காரணங்களை வெளிக் கொண்டு வரும் நோக்குடன் நிறுவனத்தின் காசேட்டின் வங்கி மீதியும் வங்கிக் கூற்று மீதியும் இணக்கம் செய்யப்படுகிறது. இதன் நோக்கம் வங்கி மீதியின் சரியான தன்மையை உறுதி செய்வதாகும்.

வணிகம் தனது காசேட்டில் வங்கிக் கொடுக்கல் வாங்கல்களைச் சொத்து மூலத் தத்துவத்துக்கு அமைய பதிவு செய்கின்றது ஆயினும் வணிக வங்கி, நிறுவனம் தொடர்பாக பேணும் நடைமுறைக் கணக்கில் வங்கிக் கொடுக்கல் வாங்கல்களைப் பொறுப்பு மூலதத்துவத்துக்கு அமைய பதிவு செய்கிறது. அதற்கான காரணம் வாடிக்கையாளர் வைப்புச் செய்யும் காசும், காசோலையும் வங்கிக்கு பொறுப்பாக அமைவதனாலாகும். இதற்கமைய மீதிகள் இணக்கம் செய்யப்பட வேண்டும்.

- காசேட்டின் வங்கி நிரலில் வரவு வைக்கப்பட்ட உருப்படிகள் வங்கியால் நிறுவனத்தின் நடைமுறைக்கணக்கில் செலவு வைக்கப்படும்.
- காசேட்டின் வங்கி நிரலில் செலவு வைக்கப்பட்ட உருப்படிகள் வங்கியில் நிறுவனத்தின் நடைமுறைக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிப்பதற்கான படிமுறைகள்

படிமுறை 1 காசேட்டின் படி வங்கி மீதியும் வங்கிக் கூற்றின்படி வங்கி மீதியும் இணங்குகின்றதா என அவதானித்தல்

படிமுறை 2 அம் மீதிகள் இணங்கவில்லையாயின் காசேட்டு வரவு நிரலுடன் வங்கிக் கூற்றின் செலவு நிரலையும், காசேட்டு செலவு நிரலுடன் வங்கி கூற்றின் வரவு நிரலையும் ஒப்பிட்டு வேறுபாட்டிற்கான காரணங்களைக் கண்டறிதல்.

படிமுறை 3 வேறுபாட்டிற்கான காரணங்களில் இருந்து காசேட்டின் வங்கி மீதியைச் சீராக்குவதற்கு உரிய காரணங்களை காசேட்டின் வங்கி நிரலில் சீராக்குதல்

படிமுறை 4 சீராக்கப்பட்ட வங்கி மீதியிலிருந்து வங்கிக் கணக்கிணக்கக் கூற்றைத் தயாரித்தல்

## மீதிகள் வேறுபடுவதற்கான காரணங்கள்

காசேட்டின்படி வங்கி மீதியும் வங்கிக்கூற்றின்படி வங்கிமீதியும் வேறுபடுவதற்கான காரணங்கள்

### 1. வழங்கப்பட்ட ஆனால் பணமாக்குவதற்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகள்

நிறுவனத்தால் வழங்கிய காசோலைகளில் சில பல்வேறு காரணங்களினால் இன்னும் வங்கிக்குச் சமர்பிக்கப்படாமல் இருக்கலாம். குறிப்பிட்ட கால எல்லைக்குரிய காசேட்டின் வங்கி நிரலில் இத்தொகை பதிவு செய்யப்படுவதனால், காசேட்டின் வங்கி மீதி குறைவாகக் காட்டப்பட்டிருக்கும். இவ்வாறு வழங்கப்பட்டு வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் எனவும் குறிப்பிடப்படும்.

## 2 வசூலிக்கப்படாத காசோலைகள்

வசூலிக்கப்படாத காசோலை என்பது, வணிகத்தினால் வங்கியில் வைப்புச்செய்யப்பட்டு, அக்குறித்தகால எல்லைக்குள் வங்கியால் நடைமுறைக் கணக்கில் காசு சேர்க்கப்படாத காசோலை ஆகும். அதனை தேறாத காசோலை, செலவு வைக்கப்படாத காசோலை எனவும் அழைக்கப்படும். காசாக்கப்படாத இக்காசோலைகள் நடைமுறைக்கணக்கில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு ஒரு குறிப்பிட்டகாலப் பகுதி எடுக்கும். இக்காலப்பகுதியில் வணிகத்தின் காசேட்டின் வங்கி மீதி அதிகமாகக் காட்டப்படும்.

## 3 வங்கிக் கட்டண அறவீடுகள்

வங்கிக் கட்டணம் என்பது, வங்கியினால் நடைமுறைக்கணக்கிலிருந்து கழித்துக் கொள்ளப்படும் சேவைக்கட்டண அறவீடுகளாகும். அவையாவன காசோலைப் புத்தகக் கட்டணம், தபாற்கட்டணம், தண்டப் பணம் போன்றவையாகும். இவை வங்கிக் கூற்றில் குறிப்பிட்டிருப்பினும் காசேட்டின் வங்கி நிரலில் பதியப்படாது இருக்கும். இதனால் வணிகத்தின் காசேட்டில் காட்டப்படும் வங்கி மீதி கூடுதலான தொகையைக் காட்டும்.

## 4. நிலையியற் கட்டளைகள்

நிலையியற் கட்டளை என்பது, குறித்த தினத்தில் குறித்த தரப்பினருக்குக் கொடுப்பனவு செய்யுமாறு வணிகத்தினால் தனது நடைமுறைக் கணக்குள்ள வங்கிக்கு வழங்கும் கட்டளையாகும். வங்கிக் கடன், தவணைக்கட்டணம், குத்தகைத் தவணைக் கட்டணம், காப்புறுதிக் கட்டணம், கட்டட வாடகை, மின்சாரக் கட்டணம், தொலைபேசிக் கட்டணம் என்பன இதற்கான உதாரணங்களாகும். இவை நிலையியற் கட்டளை எனவும் அழைக்கப்படும். இவை வணிகத்தின் காசேட்டின் வங்கி நிரலில் உள்ளடக்கப்படாதபடியால் காசேட்டு வங்கி மீதியானது கூடுதலான தொகையைக் காட்டும்.

## 5. நேரடி வைப்புக்கள்

வணிகத்தின் நடைமுறைக் கணக்கிற்கு வேறு நபர்களிடமிருந்து நேரடியாக அனுப்பப்படும் காசோலைகள், காசு, காசுக்கட்டளைகள் என்பனவாகும். கடன்பட்டோரின் நேரடி வைப்பு, பங்குலாபம், வட்டி பெறுவனவு, கட்டட வாடகைப் பெறுவனவு என்பன வங்கிக் கூற்றில் இடம் பெற்று காசேட்டின் வங்கி நிரலில் பதிவு செய்யப்படாமையினால் காசேட்டில் காட்டப்படும் வங்கி மீதி குறைவான தொகையைக் காட்டும்.

## 6 வழுக்களும் தவறுகளும்

காசேட்டின் வங்கி நிரல் தயாரிக்கப்படும்போது தவறுகளும் வழுக்களும் இடம்பெறலாம். அதேபோல் வங்கியும் தமது கணக்குகளைத் தயாரிக்கும்போது தவறுகளும் வழுக்களும் இடம்பெறலாம். அவ்வாறான காரணங்களினால் இவ்விரு மீதிகளும் வேறுபடும்.

### காசேட்டின் வங்கி மீதியைச் சீராக்கம் செய்தல்

காசேட்டின் வங்கி மீதியைச் சீராக்கும் பொழுது நேரடி வைப்புக்கள் கூட்டப்படல் வேண்டும். அதாவது காசேட்டில் வரவில் பதிய வேண்டும். நிலையான கட்டளை, வங்கிக் கட்டணம் போன்றன கழிக்கப்பட வேண்டும். அதாவது காசேட்டில் செலவில் பதிய வேண்டும்.அப்பொழுது காசேட்டில் வங்கி மீதி சீராக்கத்திற்கு உட்படும்.

வசூலிக்கப்படாத காசோலைகளும் மாற்றப்படுவதற்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகளும் வங்கி விட்ட தவறுகளும் காசேட்டுச் சீராக்கத்திற்கு உட்படுத்தப்படமாட்டாது. அதற்கான காரணம் அவற்றின் தொகைகள் ஏற்கனவே காசேட்டில் உள்ளடக்கப்பட்டிருப்பதால் மீள உள்ளடக்க அவசியமற்றதாக அமைகின்றது.

காசேட்டின் சீராக்கிய வங்கி மீதியைக் கொண்டு வங்கிக் கணக்கிணக்கக் கூற்றைத் தயாரிக்கும் பொழுது,

01. வழங்கப்பட்டிருந்து (அம்மாதத்துக்குள்) கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் பெறுமதிகளின் மொத்தம் கூட்டப்பட வேண்டும். காரணம் அக் காசோலைகளுக்குக் கொடுப்பனவு செய்யாதபடியால் வங்கியில் காணப்படும் பணம் வணிகத்தின் காசேட்டில் காணப்படும் வங்கி மீதியை விட கூடுதலான பெறுமதியைக் காட்டும்.
02. வைப்புச் செய்யப்பட்டிருப்பினும் இன்னும் வசூலிக்கப்படாத (தேறாத) காசோலைகளின் பெறுமதி கழிக்கப்பட வேண்டும். அதற்கான காரணம் அக் காசோலைகள் இன்னும் வங்கியினால் வணிகத்தின் நடைமுறைக் கணக்கில் கூட்டப்படாமையினால் நடைமுறைக் கணக்கிலுள்ள காசு மீதி குறைவான பெறுமதியைக் கொண்டிருக்கும்.

இவ்வாறு இணக்கும் போது வங்கிக் கூற்றில் காட்டப்பட்டுள்ள மீதி கிடைக்கும்.
அடுத்து காசேட்டின் வங்கி நிரலையும் வங்கியினால் அனுப்பப்படும் வங்கிக் கூற்றையும் ஒப்பிட்டு வங்கிக் கணக்கிணக்கக் கூற்றை தயாரிக்கும் முறை பற்றி விளங்கிக் கொள்வோம்.

**உதாரணமாக சந்திராவின் வணிகத்தின் மார்ச் மாதத்தில் காணப்பட்ட காசேட்டின் வங்கி நிரல்**

வரவு காசேடு செலவு

| திகதி | விபரம் | வங்கி | திகதி | விபரம் | வங்கி |
|---|---|---|---|---|---|
| 2008 | | | 2008 | வழங்கிய காசோலை | |
| 03-01 | மீதி.கீ.கொ.வ | 16,000 | 03-05 | AB -06 | 7,000 |
| 03-06 | காசு வைப்பு | 13,000 | 03-12 | AB -07 | 12,400 |
| 03-08 | காசோலை வைப்பு | 8,700 | 03-16 | AB -08 | 15,400 |
| | CD -218 | | 03-23 | AB -09 | 6,200 |
| 03-20 | காசோலை வைப்பு | 6,000 | 03-31 | மீதி.கீ.கொ.செ | 19,800 |
| | PR- 425 | | | | |
| 03-29 | காசோலை வைப்பு | | | | |
| | MP- 517 | 7,600 | | | |
| | SP- 420 | 9,500 | | | |
| | | 60,800 | | | 60,800 |
| 04-01 | மீதி.கீ.கொ.வ | 19,800 | | | |

சந்திரா வியாபாரத்துக்கான 2009 மார்ச் மாதம் வங்கியால் அனுப்பப்பட்ட வங்கிக் கூற்று

லோவர் வீதி
பதுளை கிளை
பதுளை.
சந்திரா ஸ்டோர்ஸ்
BANK OF CEYLON
கணக்கு இலக்கம்

Account Number
Currency

| Date | Particulars | Payments | Receipts | Balance |
|---|---|---|---|---|
| 1.3.2008 | மீதி | | | 16,000 |
| 3.3.2008 | காசு வைப்பு | | 13,000 | 29,000 |
| 8.3.2008 | காசோலை கொடுப்பனவு AB 06 | 7,000 | | 22,000 |
| 14.3.2008 | காசோலை வைப்புCd 218 | | 8,700 | 30,700 |
| 20.3.2008 | காசோலை கொடுப்பனவு AB 07 | 12,400 | | 18,300 |
| 22.3.2008 | நிலையியல் கட்டளை (வங்கிக் கடன்) | 14,000 | | 4,300 |
| 25.3.2008 | கடன்படுநர் நேரடி வைப்பு | | 8,400 | 12,700 |
| 28.3.2008 | காசோலை வைப்பீசு. 425 | | 6,000 | 18,700 |
| 30.3.2008 | பங்கிலாபம் | | 4,900 | 23,600 |
| 30.3.2008 | வரி | 800 | | 22,800 |
| 31.3.2008 | வங்கிக் கட்டணம் | 1,200 | | 21,600 |
| | | | | 21,600 |

மீதிகளுக்கு இடையிலான வேறுபாட்டிற்கான காரணங்களில் காசேட்டில் மாத்திரம் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணங்களைத் தெரிவு செய்து காசேட்டில் வங்கி மீதியைச் சீராக்கத்திற்கு உட்படுத்த வேண்டும். அவ்வாறு தயாரிக்கப்பட்ட காசேட்டில் சீராக்கிய வங்கி மீதி பின்வருமாறு காட்டப்படுகின்றது.

**சீராக்கிய காசேடு**

| விபரம் | வங்கி | விபரம் | வங்கி |
|---|---|---|---|
| மீதி கீ.கொ.வ | 19,800 | வங்கிக்கடன் (நிலையியற் கட்டளை) | 14,000 |
| கடன்பட்டோர் (நேரடி வைப்பு) | 8,400 | வரி | 800 |
| பங்குலாபம் | 4,900 | வங்கிக்கட்டணம் | 12,00 |
| | | மீதி கீ.கொ.செ | 17,100 |
| | 33,100 | | 33,100 |
| மீதி கீ.கொ.வ | 17,100 | | |

இதன் பின் காசேட்டின் சீராக்கிய வங்கி மீதியைக் கொண்டு வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். அப்பொழுது வங்கிக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள இறுதி மீதி கிடைக்கும். இது பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

சந்திரா வியாபாரத்தின் 2008 மார்ச் மாத வங்கிக்கணக்கு இணக்கக் கூற்று

| விபரம் | ரூபா | ரூபா |
|---|---|---|
| சீராக்கப்பட்ட காசேட்டின் படி வங்கி மீதி கூட்டுக | | 17,100 |
| சுமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | | |
| AB - 08 | 15,400 | |
| AB - 09 | 6,200 | 21,600 |
| | | 38,700 |
| கழிக்குக. வசூலிக்கப்படாத காசோலைகள | | |
| MP - 517 | 7,600 | |
| SP - 420 | 9,500 | 17,100 |
| வங்கிக் கூற்றின் படி வங்கி மீதி | | 21,600 |

## செயற்பாடு 06

2008.01.01 இல் சிவராஜா என்பவர் ரூபா 60,000 வங்கியில் இட்டு நடைமுறைக் கணக்கொன்றை ஆரம்பித்து வணிகம் ஒன்றை ஆரம்பித்தார். பல்வேறு கொடுப்பனவுகளுக்காக காசும், காசோலையும் வழங்கப்படுகின்றன. கிடைக்கப்பெறும் காசு, காசோலை என்பன அவ்வப்போது வங்கியில் வைப்புச் செய்வதுடன், நிலையியற் கட்டளைக்கு அமைய வங்கிக்கடன், தவணைக் கட்டணம் போன்றவற்றைச் செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2008 ஜனவரி மாதத்துக்காக வங்கியில் இருந்து கிடைக்கப்பெற்ற வங்கிக் கூற்றில் காட்டப்பட்ட 31.01.2008 இல் சாதகமான மீதி, அன்றைய காசுப் புத்தகத்தில் வங்கி மீதியுடன் இணங்கியிருக்கவில்லை என்பது ஒப்பிட்டுப் பார்த்த பொழுது வெளிப்பட்டது.

தேவைப்படுவது

(அ) மேற்கூறிய விபரங்களுக்கு ஏற்ப வணிகத்தில் காசுப் புத்தகத்தில் வங்கி நிரலில் உள்ளடக்கப்பட்டுள்ளது என நீர் கருதக் கூடிய கொடுக்கல் வாங்கல்களைக் கற்பனையாகக் காட்டி அதற்குரிய மூல ஆவணம் என்பவற்றை எழுதுக.

(ஆ) வங்கியினால் அனுப்பப்பட்ட வங்கிக் கூற்றில் செலவு நிரலில் காட்டப்பட்டுள்ளது எனக் கருதக் கூடிய காசேட்டு மீதியைப் பாதிக்கக் கூடிய வெவ்வேறு வகையான உருப்படிகள் இரண்டை தருக.

(இ) வங்கியினால் அனுப்பப்பட்ட வங்கிக் கூற்றில் வரவு நிரலில் காட்டப்பட்டுள்ளது எனக் கருதக் கூடிய காசேட்டு மீதியைப் பாதிக்கக் கூடிய வெவ்வேறு வகையான உருப்படிகளை இரண்டை தருக.

(ஈ) நீர் மேலே கற்பனையாக தயாரித்த விடயங்களுக்கேற்ப திருத்திய காசேட்டையும், வங்கிக்கூற்றையும் தயாரிக்க.

## செயற்பாடு 07

2008 பெப்ரவரி மாதம் காதருடைய வணிகத்தின் காசுப் புத்தகத்தில் (வங்கிநிரல்), வரவு மீதி ரூபா 18,500 காணப்பட்டது. அந்த மாதத்திற்குரிய வங்கியிலிருந்து வணிகத்திற்குக் கிடைத்த வங்கி கூற்றுடன் ஒப்பிட்டுப் பார்த்த போது அது இணங்கவில்லை. வேறுபாட்டுக்கான காரணங்கள் பின்வருமாறு காணப்பட்டன.

அ) பெப்ரவரி மாதம் வைப்புச் செய்யப்பட்டு அம்மாதத்திற்குள் வசூலிக்கப்படாத காசோலைகள்
1. சப்ராஸ் என்பவரின் 2,000 ரூபாவுக்கான காசோலை
2. ரிஸ்வான் என்பவரின் ரூபா 4,000 ரூபாவுக்கான காசோலை.

ஆ) பெப்ரவரி மாதத்தில் வரையப்பட்டு இம்மாதத்திற்குள் இன்னும் மாற்றப்படுவதற்கு சமர்பிக்கப்படாத காசோலைகள்
1. காசோலை இலக்கம் 185320 ரூபா 2,500
2. காசோலை இலக்கம் 185322 ரூபா 6,000

இ) சாகிர் நிறுவனத்திலிருந்து ரூபா 4,500 பங்குலாபம் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக செலவு வைக்கப்பட்டிருப்பினும் காசேட்டில் பதியப்படவில்லை

**தேவைப்படுவது**

1. 2008 பெப்ரவரிமாத காசுப்புத்தகத்தின் (வங்கி நிரல்) மீதியைச் சீராக்குக.
2. 29..02.2008 இல் வங்கி இணக்கக் கூற்றைத் தயாரித்து வங்கிக் கூற்று மீதியைக் காண்க.